சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M.முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

**அசல் வழக்கு எண்.88/2021**

வாதி தரப்பு சாட்சி வா.சா.2 ன் வாக்குமூலம் 1875 ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திருமதி. B. மகாலெட்சுமி, பெஞ்ச் கிளார்க் நிலை 2 என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர்: | திரு. செந்தில்நாதன் | த/பெ: உத்தண்டி |
| வயது: | | ஊர் : |
| தொழில்: | | முகவரி: |
| தேதி: | 09.04.2026 | தாலுக்கா: |

முதல் விசாரணை...

இவ்வழக்கில் வாதி தரப்பு சாட்சி ஆவேன். நான் என் முதல் விசாரணையை எழுத்து மூலமாக முதல் நிலை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்ட விபரங்கள் எனக்கு நன்கு தெரியும் அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வழக்கு விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பாபு உயிருடன் இருந்த போது ஒப்பந்தம் செய்துக்கொண்டார் ஒப்பந்தபடி பத்திரம் எழுதிக்கொடுக்காததால் அவர் மனைவி வழக்கு தாக்கல் செய்துள்ளார். நான் திருவாரூர் தாலுக்கா கூடூரில் வசிதது வருகிறேன். தாவா சொத்து நன்னிலம் தாலுக்கா பூங்குளம் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். பாபு எனக்கு தூரத்து உறவினர் மற்றும் என்னுடன் எலக்டிரிக்கல் வேலை பார்த்ததில் நண்பரும் ஆவார். அதனால் என்னை அபிராமி சாட்சியமளிக்க அழைத்தாரா என்றால் ஆமாம். எந்த வருடம் ஒப்பந்தம் ஏற்பட்டது என்றால் 2018 ஆம் வருடம். 2018 ஆம் வருடம் தான் கிரய ஒப்பந்தம் ஏற்பட்டதாக பணம் கொடுப்பதாக பாபு சொன்னார் மற்ற விவரம் எனக்கு தெரியாது. என்னிடம் கையொப்பம் கேட்டார்கள் போட்டுக்கொடுத்தேன். எந்த தேதியில் முதலில் கிரயம் ஒப்பந்தம் பேசப்பட்டது என்றும் எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டது என்றும் எனக்கு ஞாபகமில்லை. முதல்விசாரணை வாக்குமூலத்தை படித்து பார்த்துதான் கையொப்பம் போட்டேன். முதல்விசாரணையில் எந்த தேதியில் கிரய ஒப்பந்தம் ஏற்பட்டது என்று சொல்லவில்லை என்றால் சரிதான். எவ்வளவு

தொகை கிரயம் பேசப்பட்டது என்றால் ஞாபகமில்லை. அதனால் பாபு எத்தனை தவணைகளில் எவ்வளவு கொடுத்தார் என்று என்னால் சொல்லமுடியாது என்றால் சரிதான். எவ்வளவு பணம் பாபு கொடுத்தார் என்றால் ஞாபகமில்லை. என் முன்னிலையில்தான் பாபு பணம் கொடுத்தார். எனக்கு ஞாபகமறதி உண்டா என்றால் இல்லை. நிரூபணவாக்குமூலத்தில் எவ்வளவு தொகை பாபு கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் ஞாபகமில்லை. 8 வருடம் ஆவதால் மறந்துவிட்டேன். இந்த வழக்கில் எத்தனை பிரதிவாதிகள் என்றால் 5 நபரோ 6 நபர்களோ உள்ளார்கள். பிரதிவாதிகள் அனைவரும் பணம் வாங்கினார்களா என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 ஆவணத்தில் அனைத்து பிரதிவாதிகளும் கையொப்பம் போட்டுள்ளார்களா என்றால் இல்லை. 4 ஆம் பிரதிவாதி காமாட்சியை தவிர மற்ற பிரதிவாதிகள் போட்டுள்ளார்கள். எனவே அனைத்து பிரதிவாதிகளும் சேர்ந்து பணம் வாங்கிகொண்டதாக முதல்விசாரணையில் சொல்லியுள்ளது தவறு என்றால் சரிதான். கிரய ஒப்பந்த பத்திரம் யார்பெயரில் வாங்கப்பட்டது எங்கு தட்டச்சு செய்யப்பட்டது போன்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பாபு வீட்டிற்கு யதார்த்தமாக சென்றபோது நிலம் விற்பது சம்பந்தமாக பேசிக்கொண்டிருந்தார்கள். சாட்சி கையொப்பம் கேட்டார்கள் போட்டேன். கிரய ஒப்பந்ததில் உள்ள முழுவிவரமும் தெரியுமா என்றால் அப்போது படித்தேன், தற்போது சொல்ல இயலாது. கிரய ஒப்பந்தத்தில் எந்த எந்த தேதிகளில் எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பாபு எனக்கு தூரத்து உறவினர் என்பதாலும் என்னுடன் வேலை பார்த்தவர் என்பதாலும் வழக்கு தாக்கல் செய்த காலத்தில் பாபு கேட்டுக்கொண்டதற்காக சாட்சி கையொப்பம் மட்டும் போட்டுக்கொடுத்தேன் என்றாலும் வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.